தருமபுரி.வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திருமதி.க.விஜயா.பி.எஸ்சி.(விவ).

*******

செ.மு.ஆ.எண் அ2/1828/2021

நாள்.06.03.2023

சுபகிருது வருடம்மாசி-22

திருவள்ளுவர்ஆண்டு.2054

பொருள் :- பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.க.அசோகன். இளநிலை உதவியாளர் (பிணையம்), துணை வேளாண்மை விரிவாக்க மையம், பொம்மிடி, வேளாண்மை உதவி இயக்குநர், அலுவலகம் பாப்பிரெட்டிப்பட்டி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டில் நேரடி போட்டித் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் செய்து ஆணையிட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :-

1. வேளாண்மை இயக்குநர், சென்னை அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பணி மேலாண்மை) அவர்களின் செயல்முறை ஆணை எண் அநிபி5/139388/2018, நாள்.01.03.2019.
2. வேளாண்மை இணை இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/2780/2019.நாள்.06.03.2019.
3. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் அநிபி5/145796/2019, நாள்.27.07.2020.
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ2/4528/2020(1). நாள்.30.07.2020.
5. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். அபபி3/23567/2019.நாள்.11.01.2023

******

ஆணை:

பார்வை(1)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டில் நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆக தற்காலிக பணியமர்வில் தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை இணை இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்ட திரு.க.அசோகன் என்பவருக்கு பார்வை(2)-இல் காணும் செயல்முறை ஆணைப்படி, வேளாண்மை உதவி இயக்குநர், மேற்கு ஆரணி, கண்ணமங்கலம் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை(3)-இல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைப்படி விருப்ப மாறுதலில் இவ்வலுவலக கட்டுப்பாட்டில் வேளாண்மை உதவி இயக்குநர், பாப்பிரெட்டிப்பட்டி துணை வேளாண்மை விரிவாக்க மையம் பொம்மிடி அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆகப் பணிப்புரியும் திரு.க.அசோகன், அவர்களின் சாதிச்சான்று (எண்.040413061)உண்மைத்தன்மை அறிக்கை மாநில கூர்ந்தாய்வு குழுவிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டதைத் தொடர்ந்து தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தொடர்ச்சி...

| வ. எண் | பெயர்/பதவி பணிப்புரியும் அலுவலகம் | பிறந்த தேதி | இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருக.அசோகன், இளநிலை உதவியாளர்(பிணையம்), துணை வேளாண்மை விரிவாக்க மையம், பொம்மிடி, வேளாண்மை உதவி இயக்குநர். அலுவலகம் , பாப்பிரெட்டிப்பட்டி. | 03.07.1991 | 15.03.2019 மு.ப | 15.03.2019 மு.ப |

மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள் சட்டம் - 2016) 28(1)-ன்படி இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று வருட தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34 இணைப்பு 5-இன்படி தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் பவானிசாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சினை நிறைவு செய்யப்பட வேண்டும்.

இப்பணிவரன்முறை ஆணை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி-IV பணிகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் இவருக்கு தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-க.விஜயா
வேளாண்மை இணை இயக்குநர்,
தருமபுரி

பெறுநர் :

திருக.அசோகன்,
இளநிலை உதவியாளர்(பிணையம்),
துணை வேளாண்மை விரிவாக்க மையம், பொம்மிடி,
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் , பாப்பிரெட்டிப்பட்டி.

வழி(ம) நகல் - வேளாண்மை உதவி இயக்குநர் பாப்படிரெட்டிப்பட்டி.
நகல்- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600003 .
(தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்- வேளாண்மை இயக்குநர், சென்னை(அபி பிரிவுக்கு) அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்- இருப்புகோப்பு/ உபரி.

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர்

07/03/2023